1972 மார்ச் 14]

கண் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம்

* 481 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கண் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை அரசினர் கண் மருத்துவ மனைக்கு கீழ்க்கண்ட கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

1. பரிசோதனைக் கூடத்துடன் கூடிய புற நோயாளி பிரிவு ரூ. 14.00 லட்சம்.

2. அறுவை சிகிச்சை அரங்குடன் கூடிய 200 படுக்கைகள் கொண்ட ஒரு மாடி (100 படுக்கை கொண்ட பொதுப்பகுதியும், 100 படுக்கைகள் கொண்ட சிறப்புப்பகுதியும் ரூ. 8.75 லட்சம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சித்த மருத்துவ மனை ஆசியா விலேயே சிறந்த கண் மருத்துவ மனைகளில் ஒன்றாகக் கருதப்படுவதாலும், இந்தியாவின் பல பாகத்திலிருந்து சிகிச்சைக்கு வர வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுவதாலும்; மத்திய அரசின் சிறப்பு மானியம் அதற்கு வழங்கப்பட் டிருக்கிறதா ? ஐ.நா. நிறுவனத்தின் உதவி கிடைத்து இருக்கிறதா ? அத்தகைய உதவி கேட்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கண் மருத்துவ மனையா ? சித்த மருத்துவ மனையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது கண் மருத்துவ மனையைப் பற்றிய கேள்வி. சித்த மருத்துவ மனைக்கு வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருப்பூர் நகரில் ஊட்டச் சத்துணவு

* 482. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் ஊட்டச் சத்துணவுத் திட்டம் எந்த தேதியில் இருந்து அமுலுக்கு வருகிறது ?

(இ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) சிறப்புச் சத்துணவுத் திட்டம், 27—7—1971 லிருந்து திருப்பூரில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) திருப்பூர் நகரத்தில் உள்ள 6 மாதம்—3 ஆண்டு வயதுத் தொகுதியைச் சேர்ந்த 1,313 எழைச் சிறுர்கள் இத் திட்டத்தினல் பயனடைகிறுர்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் ஆண்டில் 250 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 75 கிராம் எடையுள்ள 'சிறப்பு' பால் ரொட்டி வழங்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்னும் ஏராளமான குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்தில் வராமல் இருக்கிறுர்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு அவர்கள் ஒதுக்கியிருக்கிற ரூபாயும், எந்த அளவுக்கு எத்தனை பேருக்கு அளிக்க வேண்டுமென்ற குறிப்பில் உள்ளபடி (பழங்குடி) ஷெடியூல்ட் டிரைப்ஸ் சினருக்கு 3,000 குழந்தைகளுக்கும், நகர்ப்புற சேரிக் குழந்தைகளுக்காக 1,56,000-க்கும் கொடுக்கப்படுகிறது. ஆக மொத்தம் 1,59,000 குழந்தைகளுக்கு தரப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதை இப்போது 1,53,350 குழந்தைகளுக்குத் தந்து கொண்டு இருக்கிறோம். அதுவும், அந்தப் பழங்குடி குழந்தைகள் 1,300 பேருக்குத் தருகிறோம். அதையும் கூட சேர்த்து 1 லட்சம் மக்கள் மேற்பட்டு வாழ்கிற பகுதியில் இருக்கிற குழந்தைகளுக்கு நீடித்துக் கொடுப்பதற்கும் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் கர்பிணியாக இருப்பவர்களுக்கும், ஆறு வயது வரையில் இருப்பவர்களுக்கும் தரப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருப்பூர் நகரத்தில் இப்போது ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் என்னென்ன உணவு வகைகள் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் அப்போதே விவரம் சொன்னேன். 75 கிராம் எடையுள்ள 3 ஸ்லைஸ் சிறப்புப் பால் ரொட்டிகள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் ஆண்டில் 250 நாட்களுக்குத் தரப்படுகிறது. அந்த வகையில் 1,313 திருப்பூரில் இருக்கும் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசனங்களுக்கு விசை ஏற்றங்கள் விநியோகம்

*483. வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரிசனக் குடியிருப்புக்களுக்காக தனியாக ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து 1970-71-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை பேருக்கு பம்பு செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன?